IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.61/2024

DEPOSITION OF WITNESS P.W.1

| | | |
|---|---|---|
| NAME | : | VASANTHAMMAL |
| HUSBAND NAME | : | SUBRAMANI |
| VILLAGE | : | EDAPALAYAM |
| OCCUPATION | : | COOLIE |
| AGE | : | 70 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 25th day of SEPTEMBER 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது எடபாளையத்தில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன சுப்ரமணி என்பவர் எனது கணவர். தேதி மாதம் ஞாபகம் இல்லை சுமார் 1 வருடத்திற்கு முன்பாக மாலை 4 மணிக்கு எனது கணவர் வீட்டில் இருந்து கிளம்பி XL இருசக்கர வாகனத்தில் எங்கள் நிலத்திற்கு சென்று விட்டு திரும்ப வீட்டிற்கு வரும் போது காமாட்சிஅம்மன் பேட்டை ஹோட்டல் அருகே வரும் போது விபத்து ஏற்பட்டதாக ஜெயபிரகாஷ் என்பவர் எனக்கு தகவல் சொன்னார். நானும், எனது உறவினர்களும் சம்பவம் இடம் சென்றோம். அங்கு சென்று எனது கணவரை தூக்கி தண்ணீர் குடித்து கொண்டிருக்கும் போது சுயநினைவின்றி காணப்பட்டார். எனது கணவருக்கு கண், வயிறு, கை, ஆகிய காயப்பகுதிகளில் காயம் இருந்தது. பின்னர் எனது கணவரை ஆம்புலன்ஸ் மூலமாக வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். சம்பவம் தொடர்பாக நான் தான் புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு என்னுடையது தான். அது **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் விபத்து ஏற்படுத்தியவர் ஜெயராமன் என்பவர என்று தெரிந்து கொண்டேன். வாகனம் பெரிய வண்டி என்று கூறினார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான் ஜெயபிரகாஷ் என்பவர் செல்லிதான் பார்த்தோம். காவல்நிலையத்தில் புகாரை நான் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எழுதிய புகாரில் என்னை கையொப்பம் செய்ய சொன்னார்கள் என்றால் சரிதான். புகாரில் என்ன சங்கதி உள்ளது என்று எனக் கு தெரியாது. விபத்து நடந்த இடம் தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். எந்த பக்கத்தில் இருந்து எந்த பக்கம் என்றால் திசைகள் பற்றி எனக்கு தெரியாது ஆனால் எனது வீட்டிற்கு பக்கமாக வந்தார். எனது கணவர் சாலை கடக்கும் போது அது அரசால் சாலையை கடக்கும் இடம் இல்லை என்றால் சரிதான். அனுமதிக்காத இடத்தில்

எனது கணவர் சாலை கடந்தார் என்றால் சரிதான். எதிரி காட்பாடியில் இருந்து மேற்கில் இருந்து கிழக்கி நோக்கி வரும்போது எனது கணவர் அனுமதிக்காத இடத்தில் சாலை கடக்கும் போது நிலை தடுமாறி கீழே விழுந்து அடிப்பட்டு இறந்துவிட்டார் என்றும் எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. எனது கணவர் சின்ன வண்டி ஓட் டி வந்தார். என் கணவர் சின்ன ஓட்டி வந்து கீழே நிலை தடுமாறி கீழே விழுந்து இறந்துவிட்டார் என்றும் எதிரி ஓட்டி வந்த வண்டி பெரிய வண்டி என்றும் இறந்தவரின் குடும்பத்திற்கு பரிகாரம் கிடைக்க வேண்டி எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்யபட்டு எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

<u>அரசு தரப்பு மறுவிசாரணை</u>

புகாரை நான் நான் சொல்ல சொல்ல முரளி என்பவர் எழுதினார்.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.61/2024

DEPOSITION OF WITNESS P.W.2

| | | |
|---|---|---|
| NAME | : | VENKATESAN |
| HUSBAND NAME | : | DASARATHAN |
| VILLAGE | : | RANGAMPETTAI |
| OCCUPATION | : | FARMAR |
| AGE | : | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 25th day of SEPTEMBER 2025.

**<u>சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.</u>**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது ரங்பம்பேட்டையில் வசித்து வருகிறேன். விவசாயம் வேலை செய்து வருகிறேன். அ.சா1 தெரியும். அவர் எனக்கு சித்தி. விபத்தில் இறந்து போன சுப்ரமணி என்பவர் எனது சித்தப்பா உறவுமுறை. கடந்த 10.03.2024 ம் தேதி நான் என்னுடைய கிராமத்தில் இருந்த போது எனது சித்தி வசந்தம்மாள் போன் மூலமாக சித்தப்பாவிற்கு விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார். நான் சம்பவம்இடம் சென்று பார்த்த போது சித்தப்பாவை ஆம்புலன்ஸ் வாகனத்தில் ஏற்றி கொண்டிருந்தார்கள். எனது சித்தப்பாவிற்கு கண், வயிறு, கை, ஆகிய காயப்பகுதிகளில் காயம் இருந்தது. காமாட்சி அம்மன்பேட்டை ே ஹாட்டல் அருகே சென்று பார்த்தேன். பின்னர் அங்கிருந்து வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு சென்றேன்சித்தப்பாவை பரிசோதித்த மருத்துவர்கள் சித்தப்பா ஏற்கனவே இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். சம்பவம் தொடர்பாக அ.சா.1 புகார் கொடுத்தார். எனக்கு நேரடியாக தெரியாது நான் பக்கத்து ஊர்காரர். பின்னர் விபத்து ஏற்படுத்தியவர் ஜெயராமன் என்பவர் என்று தெரிந்து கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

புகாதாருக்கு உறவினார் என்றால் சரிதான். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. எதிரி ஓட்டி வந்த வாகனம் தெரியாது. எனது சித்தப்பா சாலை கடந்த இடம் அரசு கடக்க அனுமதிக்காத இடம் என்றால் சரிதான். போலிசார் என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். நான் ஒரு கையொப்பம் செய்தேன். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன உள்ளது என்று எனக்கு தெரியாது. வழக்கு பற்றி எனக்கு தெரியாது என்றும் புகார்தாரர் சித்தி என்பதால் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பொய் சொல்லவில்லை. பொய் சொல்லவில்லை அதனால் வழக்கு பற்றி தனக்கு தெரியாது என்றால் சரிதான்.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.61/2024

DEPOSITION OF WITNESS P.W.3

| | | |
|---|---|---|
| NAME | : | VINAYAGAMOORTHY |
| HUSBAND NAME | : | MAHARAJA |
| VILLAGE | : | RANGAMPETTAI |
| OCCUPATION | : | PRIVATE |
| AGE | : | 30 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 25th day of SEPTEMBER 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது ரங்பம்பேட்டையில் வசித்து வருகிறேன். தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். அ.சா1 தெரியும். அவர் எனக்கு பாட்டி. விபத்தில் இறந்து போன சுப்ரமணி என்பவர் எனது தாத்தா உறவுமுறை. கடந்த 10.03.2024 ம் தேதி எனது தாத்தா மாலை 4 மணிக்கு நிலத்திற்கு செல்லவதற்காக XI இருசக்கர வாகனத்தில் சென்று விட்டு வரும்போது 6.00 மணிக்கு காமாட்சி அம்மன் பேட்டை தாபா ேஹாட்டல்அருகே விபத்து ஏற்பட்டதாக எனது பாட்டி தகவல் சொன்னார்கள். சம்பவ இடத்திற்கு நானும் எனது பாட்டி மற்றும் உறவினார்கள் சென்றோம். அங்கு எங்கள் தாத்தாவை மீட்டு ஆம்புலன்ஸ் மூலமாக வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு அழைத்து சென்றிருந்தார்கள். மறு நாள் காலையில் மருத்துவமனை சென்று பார்த்த போது இறந்த நிலையில் காணப்பட்டார். விபத்ததை ஏற்படுத்திய வாகனம் பேஸன் ப்ரோ என்றும் அவருடைய பெயர் தெரியாது. பின்னர் வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனையில் கையொப்பம் செய்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

புகாதாருக்கு உறவினார் என்றால் சரிதான். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. எதிரி ஓட்டி வந்த வாகனத்தின் எண் , எதிரியின் பெயர் தெரியாது. எனது தாத்தா சாலை கடந்த இடம் அரசு கடக்க அனுமதிக்காத இடம் என்றால் சரிதான். எனது தாத்தா எந்த திசையில் இருந்து எந்த திசை நோக்கி சென்றார் என்று எனக்கு தெரியாது. எதிரி எந்த பக்கம் வந்து எந்த பக்கம் ஓட்டினார் என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். நான் ஒரு கையொப்பம் செய்தேன். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன உள்ளது என்று எனக்கு தெரியும் தற்போது ஞாபகமில்லை. வழக்கு பற்றி எனக்கு தெரியாது என்றும் புகார்தாரர் பாட்டி என்பதால் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.61/2024

DEPOSITION OF WITNESS P.W.4

| | | |
|---|---|---|
| NAME | : | MANI |
| HUSBAND NAME | : | VARATHAN |
| VILLAGE | : | EDAPALAYAM |
| OCCUPATION | : | DRIVER |
| AGE | : | 57 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 25th day of SEPTEMBER 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது எடபாளையத்தில் வசித்து வருகிறேன். டிரைவராக வேலை செய்து வருகிறேன். நான் 6 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். விபத்தில் இறந்து போன சுப்ரமணி என்பவர் எனது மாமனார் உறவுமுறை. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரணடாவது கையொப்பம் என்னுடையது தான். அது. **அ.சா.ஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த கையொப்பத்தை எனது மாமனார் விபத்து வழக்கு சம்மந்தமாக செய்து கொடுத்தேன். சுமாார் 1 1/2 ஆண்டு களுக்கு முன்பாக காமாட்சி அம்மன் பேட்டை தாபா ேஹாட்டல்அருகே செய்து கொடுத்தேன். போலிசார் சம்பவ இடத்தில் வரைந்து கொண்டிருந்தார்கள். என்னுடன் சண்முகம் என்பவரும் கையொப்பம் செய்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

விபத்தில் எனது மாமனார் இறந்ததால் போலிசார் கேட்டுக்கொண்டதான் பெயரில் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. சம்பவ நடந்த இடம் சாலை கடக்க அரசால் அனுமதிக்காத இடம் என்றால் சரிதான். எதிரி ஓட்டி வந்த வாகனத்தின் எண் , எதிரியின் பெயர் தெரியாது. வழக்கு பற்றி எனக்கு தெரியாது என்றும் புகார்தாரர் மாமியார் என்பதால் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 25.09.2025 ஆம் தேதி பகரப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.